முதலமைச்சர் கலைஞர் :– விலைவாசி உயர்வைச் சுட்டிக் காட்டி அதற்காக வெளியில் நடைபெறுகின்ற ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள், கிளர்ச்சிகள் இவைகளை முன்னிட்டு இவற்றை ஆதரிக்கும் முகத்தான் வெளிநடப்பு செய்கிறோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரும், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியினரும், அ.தி.மு.க.வினரும் வெளி நடப்பு செய்திருக்கிறார்கள். நான் அவர்கள் இங்கேயிருந்து கருத்துக்களைச் சொல்லி விளக்கங்களைப் பெறாமல் வெளிநடப்பு செய்தமைக்காக வருத்தப்படுகின்றேன். வெளிநடப்பு என்பது ஜனநாயகத்திலே ஒரு முறை. அதைத் தான் அவர்கள் செய்து காட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்கள் மீது எரிச்சல் கொள்ளவில்லை. காழ்ப்பு கொள்ளவில்லை. ஆனால், ஒன்றை நாம் மறந்து விடக் கூடாது. ஏதோ திடீரென்று நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் கூறியதைப் போல விலைவாசி விண் உயரத்திற்கு ஏறி அது உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும் என்று ஒரு நிலை எடுத்து, இன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சிகளின் நண்பர்கள், அதாவது இடதுசாரி கட்சிகளின் நண்பர்கள் இந்த அறப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்று சொல்ல இயலாது. (இந்த நேரத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், அ.தி.மு.க. உறுப்பினர்களும் மீண்டும் அவைக்குள் வந்தார்கள்) அது அரைப் போராட்டம் என்ற காரணத்தினால் தான் (கையொலி) சென்றவர்கள் திரும்பி வந்து விட்டார்கள். எவ்வளவு விரைவாக தொலைபேசியிலே செய்தி வருவதைப் போல அவர்களுக்கு தகவல் வந்து – வெளி நடப்பா ? உள்ளே செல்லுங்கள், என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, உள்ளே மீண்டும் வந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சி யடைகிறேன்.

இங்கே நான் ஓர் அறிக்கையைப் படித்து முடித்த பிறகு – நான்கைந்து பிரச்சினைகள் கிளப்பப்பட்டன. ஒன்று, நம்முடைய எதிர்க்கட்சியின்

கொறடா செங்கோட்டையன் அவர்கள் அந்தக் கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் மீது ஒரு தீர்மானத்தை நம்முடைய அவை முன்னவர் கொண்டு வந்து, அதன் காரணமாக வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள், அவர்களை மீண்டும் அவைக்குள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டார். யாரையும் அல்லது எதிர்க்கட்சியிலே உள்ளவர்களை கடுமையாகத் தண்டிக்க வேண்டும், அல்லது கேவலமாகத் தண்டிக்க வேண்டுமென்ற நிலை எடுப்ப தல்ல இன்றைய ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம். அவர்கள் ஆளுங்கட்சியாக இருந்த போது, தனியாகவும் சிறப்பாகவும் ஒரு கூண்டே தயாரிக்கப்பட்டு, அதிலே தண்டனை என்ற பெயரால் முரசொலி செல்வத்தை – அந்தக் கூண்டிலே நிறுத்தி, அப்படி கூண்டிலே நிறுத்துவது செல்வத்திற்கு தரப்பட்ட தண்டனை என்று அதைப் பார்த்துப் பார்த்து களித்தார்கள். நான் அன்றைக்கு உள்ளே இல்லாவிட்டாலுங்கூட, அந்தக் கூண்டு இருந்த இடத்தைப் பார்த்தேன். அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் படத்திற்கும் எங்களை ஆளாக்கிய தலைவர் அறிஞர் அண்ணாவின் படத்திற்கும் இடையில் அந்தக் கூண்டு நிறுத்தப்பட்டிருந்தது. பரவாயில்லை, செல்வம் இருவருக்குமிடையே தான் நிற்கிறான், அண்ணாவின் அன்பிற் குரியவனாக வாழ்ந்தவன், இருந்தவன், செல்வா, செல்வா என்றே அண்ணா அவர்களால் அழைக்கப்பட்டவன். அதைப் போலவே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே அளவற்ற பிரியம் கொண்டு அவருடைய ரசிகனாகவே இருந்தவன், அவர்களின் படங்களுக்கு நடுவிலே குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட்ட அந்தக் காட்சியையெல்லாம் அ.தி.மு.க. ஆளுங்கட்சி யாக இருந்த போது, நடத்தப்பட்ட தண்டனை விவரங்கள். அதைப் போல எதிர்க்கட்சியை கேவலப்படுத்த வேண்டுமென்றோ, தண்டிக்க வேண்டும் என்றோ தி.மு.க. ஆட்சி நினைத்ததுமில்லை. எங்களுடைய தோழமைக் கட்சியிலே உள்ள அத்தகைய பண்பாடு கொண்டவர்களும் அல்ல. அவர்

களுடைய அறிவுரையைப் பெற்று நடந்து வருகின்ற இந்த ஆட்சியில் நம்முடைய நண்பர் செங்கோட்டையன் அவர்கள் வைத்த அந்தக் கோரிக்கை யை அறவே ஏற்றுக் கொள்ள முடியாது என்று நான் மறுக்காமல் – நாம் எல்லாம் அண்ணாவின் வழி வந்தவர்கள் என்ற அளவில், அவர்கள் செய்த குற்றத்தை – இழிந்த செயலை – என் கண் எதிரிலேயே நடந்த அந்தக் காட்சியை நான் நேராகக் கண்டிருந்தும் கூட – நம்முடைய அவை முன்னவர் கொடுத்த தீர்மானத்தையேற்று இரண்டு நண்பர்களை இந்தக் கூட்டத் தொடர் முடிகின்ற வரையிலே அவர்கள் உள்ளே வரக் கூடாது என்று செய்திருந்ததை – அந்தத் தண்டனையைக் குறைத்து நான் பரிந்துரை செய்கிறேன் – நான் அவைத் தலைவர் அவர்களுக்கு முதலமைச்சர் என்ற முறையிலே உத்தரவிடுவதாக யாரும் கருதக் கூடாது. நான் பரிந்துரை செய்கிறேன். கூட்டத் தொடர் முழுவதும் என்பதை, ஒரு வார காலம் என்கிற அளவிற்கு குறைத்து அந்தத் தண்டனையை அவர்களை மீண்டும் இங்கே அனுமதிக்க வேண்டுமென்று அவைத் தலைவராகிய தங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்றும் நம்பு கிறேன்.

அடுத்து இங்கே கோ.க. மணி அவர்களால் ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டது. டி.ஆர். பாலு அவர்கள் டெல்லியிலேயே தமிழகம் சார்பில் உள்ள அமைச்சர்களிலே ஒருவராக இருக்கிறார். அவர் இந்த “கிரீமிலேயரைப்” பற்றி அங்கே பேசிய பொழுது, வேண்டுமானால் வருமான உச்ச வரம்பை இன்னும் கொஞ்சம் அதிகமாக வைத்துக் கொள்ளுங்கள் என்று அவர் சொன்னதாகப் பத்திரிக்கையிலே வந்ததை மணி அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார். அப்படி வந்திருந்தால் அது தவறு. அப்படி டி.ஆர். பாலு சொல்லியிருந்தால் அது தி.மு.கழகம் வடித்துக் கொடுத்த கொள்கை அல்ல என்பதையும் அதைப் பற்றி சிந்தித்து ஒரு முடிவெடுக்க 18ஆம் தேதி அன்று தி.மு. கழகத்தினுடைய

உயர் மட்டக் குழு கூடுகிறது. அந்தக் குழுவிலே தான் நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர்களும், இங்குள்ள தி.மு. கழகத்தினுடைய தலைமைக் கழகச் செயலாளர்களும், மற்றவர்களும் கூடிப்பேசி முடிவை அறிவிக்க இருக்கிறோம். “கிரீமிலேயர்” வேண்டாம் என்பது தான் எங்களுடைய கொள்கை. (மேஜையைத் தட்டும் ஒலி) ஆனால், முதலில் நாம் இன்றைக்கு பெற்றிருக்கிற மகிழ்ச்சி 27 சதவிகித இட ஒதுக்கீடு. உச்சநீதிமன்றம் அதை ஏற்றுக் கொண்டுள்ளது என்பது அளவில்லாத மகிழ்ச்சியை வழங்கிக் கொண்டிருக் கிறது. கிரீமிலேயர் இருக்கிறது என்பதற்காக நாம் அந்த மகிழ்ச்சியை அப்படியே கை கழுவி விடக் கூடாது. அந்த மகிழ்ச்சியோடு, கவலையும் இருக்கிறதே, இதை நாம் எப்படியாவது துடைக்க வேண்டும், அதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதிலே நாம் யாருக்கும் சளைத்தவர்களாக இருக்க மாட்டோம். அதைப் பற்றி நான் நம்முடைய தோழமைக் கட்சிகளின் நண்பர்களோடும், வெளியிலே இருக்கின்ற தோழமைக் கட்சிகளின் தலைவர் களோடும் அதைப்பற்றிக் கலந்து பேசி ஏற்கும் வகையிலே ஒரு நல்ல முடிவைக் காண்போம் என்ற அந்த உறுதியை இந்த மாமன்றத்திற்கு தர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் அதுபற்றி திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும், பிரதமர் அவர்களுக்கும் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசிய போதும் சரி, நம்முடைய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்களோடு தொடர்பு கொண்டு பேசிய போதும் சரி – அவர்கள் எல்லாம் இதிலே நம்பிக்கையான முறையிலே தான் எனக்கு உறுதி அளித்திருக்கிறார்கள். இதிலே நாம் படிப்படியாக முன்னேறுவோம் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். அப்படி முன்னேறுகிற நேரத்தில் அதற்கு இடைஞ்சலாக நம்முடைய நடவடிக்கைகள் அமைந்து விடக் கூடாது என்பதை நான் மிகுந்த பணிவன்போடு – நமக்கு காரியம் பெரியது, அந்தக்

காரியத்திலே எதிர்காலச் சந்ததியினரை கல்வித் துறையில், சமுதாயத் துறை யில், சமூக நீதித் துறையில் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பை அன்று முதல் இன்று வரை மேற்கொண்டிருக்கின்ற நாம் கை விட்டு விடக் கூடாது, அதை வீணடித்து விடக் கூடாது என்பதற்காக பொறுமையாக இருந்து – பொறுமை நிச்சயமாக வெல்லும் என்ற நம்பிக்கையோடு அந்தப் பொறுமையை நாம் கடைப்பிடிப்போம் (மேஜையைத் தட்டும் ஒலி) என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, விலைவாசி உயர்வு ஏதோ இங்கே ஆளுங்கட்சியாக அமர்ந்திருக்கின்ற எங்களுக்கெல்லாம் பிடித்த ஒன்று – அது எதிர்க் கட்சி களிலே உள்ளவர்களுக்குத் தான் பிடிக்காத ஒன்று – என்பதல்ல. விலை வாசி உயர்கிற நேரத்தில் வாங்கும் சக்தி அதிகமானால், விலைவாசியின் கனம் தெரியாது, சுமை தெரியாது என்பது ஒரு பொருளாதாரக் கணக்கு. ஒரு காலத்தில் தங்கத்தின் விலை பவுன் இருபது ரூபாயாக இருந்தது. இப்போது பவுன் விலை பத்தாயிரம் ரூபாய் என்ற அளவிற்கு சகட்டு மேனிக்கு ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளிலும் தொலைக் காட்சிகளிலும் செய்தி வருவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். ஆகவே வாங்கும் சக்தி உள்ளவர் களாக சாதாரண பிரஜை ஆகி விட்டால், எவ்வளவு தான் விலைவாசி உயர்ந்தாலும் அது தேர்தலிலே பயன்படுத்துவதற்குத் தான் உதவுமே தவிர, அந்த உயர்வினால் யாரும் வேதனைப்பட மாட்டார்கள். ஆனால் அதைச் சமாளிக்க வாங்கும் சக்தியை நாம் உயர்த்த வேண்டும். அந்தப் பொருளாதாரத்தை ஒரு நாடு கடைப்பிடிக்க வேண்டும். ஒரு ஆட்சி கடைப் பிடிக்க வேண்டும். அப்படி கடைப்பிடித்தால் விலைவாசியினால் பெரும் பாதகம் ஏற்பட்டு விடாது.

நம்முடைய மத்திய அரசு இந்த விலைவாசி உயர்வுக்குப் பொறுப் பேற்க வேண்டுமென்று சொல்லுகிறோம். சொல்லுகிற அதே நேரத்தில்

இங்கேயிருந்து வெளி நடப்பு செய்வது பொருத்தமானதா என்று எனக்குத் தெரியவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள், எனக்கு தோழர்கள், தி.மு. கழகத்தின் தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான். அவர்களுக்கும் நான் சொல்லிக் கொள்வேன். இந்தியாவில் எது வரக் கூடாது என்று கருது கிறோம் ? எது ஆதிக்கத்தைக் கைப்பற்றக் கூடாதென்று கருதுகிறோம் ? மத வாத சக்திகள் – பகுத்தறிவுக்கு விரோதமானவர்கள் – இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றக் கூடாது, மத வெறி கூடாது, காந்தி அடிகளையே கொன்ற பாவிகளின் ஆட்சி வந்து விடக் கூடாது என்பதற்காகத் தான் நாம் மத வாத சக்திகளுக்கு இடம் தராத ஓர் ஆட்சி வேண்டுமென்று சொல்லும் போது அதையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால் மிச்சப்படுவது யார் என்கிற போது – இன்றைக்கு இந்தியாவிலே மத வாத சக்தியாக இல்லாத ஓர் ஆட்சி உருவாக வேண்டுமேயானால், தற்போது அது காங்கிரஸ் கட்சியினால் தான் முடியும் (மேஜையை தட்டும் ஒலி) – இன்றைக்கு நம்முடைய கோவிந்தசாமி ஏற்றுக் கொள்கிறாரோ இல்லையோ, முந்தாநாள் ஏற்றுக் கொண்டவர் தான், நாளைக்கும் ஏற்றுக் கொள்ளப் போகிறவர் தான் (மேஜையைத் தட்டும் ஒலி) – மத வாத சக்தி வளர்ந்தால் பரவாயில்லை, அதற்காக விலைவாசி உயர்வைத் தடுக்காமல் இருந்த காங்கிரஸ் கட்சியை ஆள விட மாட்டோம் என்று அவர்கள் சொல்ல மாட்டார்கள். பொதுவான ஒரு நிலை – மதவாதமற்ற – மனித நேயமிக்க – ஓர் ஆட்சி வரவேண்டுமென்பதிலே யாருக்கும் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. அந்தக் கருத்துக்களின் ஒற்றுமையிலே தான் எதிர்கால இந்தியா வாழ முடியும், வளர முடியும், வெல்ல முடியும், அப்படிப்பட்ட ஒற்றுமையை நாம் உருவாக்க வேண்டும். மத்திய சர்க்கார் தவறு செய்கிறது என்பதற்காக அதைச் சுட்டிக் காட்டி, நாங்கள் சொன்னதைக் கேட்கவில்லை, அவர்கள் இதற்கு முன்பே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்று கூறி, மாநில

அரசைக் கண்டித்து நீங்கள் வெளிநடப்பு செய்தது – முறையல்ல. ஆனால் வெளி நடப்பு என்பது ஜனநாயகத்திலே ஏற்றுக் கொண்ட முறை என்ற காரணத்தால், நான் அதற்காக சினம் கொள்ளவில்லை, சீற்றம் கொள்ளவில்லை, வருத்தப்பட வில்லை. இதிலே ஆளுங்கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் இந்த வெளி நடப்பிலே கலந்து கொள்ள முடியாது. கலந்து கொள்ளக் கூடாது. ஏனென்றால் நாமெல்லாம் சேர்ந்து தான் ஒரு அணியைத் தொடங்கினோம். அந்த அணி மதவாத அணி அல்ல. மதவாத சக்திகளுக்கு எதிர்ப்பான அணி – அந்த அணியிலே பிணி வந்து விடக் கூடாது. அந்த அணி நல்ல முறை யிலே இயங்க வேண்டும். அப்படி இயங்க வேண்டுமென்பதற்காகத் தான் – உங்களுக்குத் தெரியும் – கடந்த காலத்திலே – நான்கைந்து மாத காலமாக – அணுசக்தி விவகாரத்திலே கூட ஏற்படவிருந்த பிளவை அந்தப் பிளவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள அந்தப் பெரும் பணியை ஓரளவு நான் ஏற்றுக் கொண்டிருந்தேன் (மேஜையை தட்டும் ஒலி) என்பதும் வட புலத்திலே உள்ள கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கெல்லாம் அந்த உண்மை தெரியும் என்பதும் நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. பத்திரிகைகளிலே வந்த செய்திகள். ஆகவே அவர்களும் சரி, நானும் சரி காங்கிரஸ் கட்சியின் செய்கையிலே அவசரப்படாமல் நாம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற கொள்கை, மக்களை மதவாதத்திலிருந்து மீட்க வேண்டும், மத வெறியிலிருந்து மீட்க வேண்டும், மத வாத சக்திகளுக்கு இடம் தரக் கூடாது, மீண்டும் ஒரு அயோத்தி, மீண்டும் ஒரு ராம ரதம், மீண்டும் அத்வானி அவர்களின் புயல்வேகச் சுற்றுப்பயணம் என்றெல்லாம் நாட்டிலே ஏற்பட்டால், நாடு காடாகி விடும் – காடாகாமல் நாட்டைப் பாதுகாக்க வேண்டிய அந்தப் பெரும் கடமை நமக்கு இருக்கிறது என்பதை எடுத்துரைத்து இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.